**Judicial Form No.53.**

**{See Rule 42}**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Cr.P.C)

-----

IN THE COURT OF THE ADDITIONAL SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | ) | |
| Miscellaneous | .. | .. | ) | |
| | | | ) | **Sessions Case No. 89/2020** |
| Preliminary Register | .. | .. | ) | |
| Sessions | .. | .. | ) | |

| | | |
|---|---|---|
| | { | **Prosecution PW2** |
| Deposition of witness for PW. | { | Defence |
| | { | Court |

| | | |
|---|---|---|
| Name | : | கணபதி |
| Father's Name | : | சண்முகம் |
| Village | : | புதுப்பட்டி |
| Taluk | : | திருச்சுழி |
| Caste | : | |
| Calling | : | சிற்பி |
| Religion | : | |
| Age | : | 65 |

(எதிரிகள் ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 {Central Act 44 of 1969} on the **08th day of July 2025.**

விசாரணை ஆரம்பிக்கும் நேரம் -

முதல் விசாரணை **:** நான் தற்போது புதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். வழக்குசம்பவத்தில் இறந்துபோன கணேசமூர்த்தியை தெரியும், அவர் எனது

பக்கத்துவீட்டுக்காரர். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களும் எனது பக்கத்துவீட்டுக்காரர்கள். அ.சா.1 கலைச்செல்வியை எனக்கு தெரியும். கலைச்செல்வியும், அவரது கணவரும் காரியாபட்டியில் குடியிருந்தார்கள். அவர்களுக்குள் என்ன பிரச்சினை என்று எனக்கு தெரியாது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு இரவு சுமார் 9 மணிக்கு நான் வீட்டிற்குள் படுத்திருக்கும்போது, காலைச்செல்வி வீட்டின் பக்கம் சத்தம் கேட்டது. நான் பார்க்கும்போது கணேசமூர்த்தி, அவருடைய வீட்டிற்கு எதிரே உள்ள சுவர் அருகே கீழே விழுந்துகிடந்தார். அவரது அருகே இரத்தம் கிடந்தது. அவருக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. கணேசமூர்த்தியின் பாட்டி மட்டும் அங்கு இருந்தார். கணேசமூர்த்தியை ஆட்டோவில் ஏற்றி சென்றார்கள். கணேசமூர்த்தி இரண்டு நாட்கள் கழித்து இறந்துவிட்டார் என்று தகவல் தெரிந்துகொண்டேன்.

**(**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டதன் பேரில் அதற்கு அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**)**

அரசுதரப்பு குறுக்குவிசாரணை

கலைச்செல்விக்கும் அவரது கணவர் செந்தில்குமாருக்கும் பிரச்சினை ஏற்பட்டு அவர்கள் இருவரும் பிரிந்து இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றுசொன்னால் - சரியல்ல. 24.05.2020 ம் தேதி இரவு 9 மணிக்கு செந்தில்குமார் வீட்டின் பக்கம் சத்தம் கேட்டது என்றும், நானும் எனது மனைவி, மகன் ஆகியோர் சென்றுபார்த்தபோது, செந்தில்குமார் வீட்டின் வாசல் முன்பு கணேசமூர்த்தியை செந்தில்குமார், செல்வகுமார், ஆனந்தகுமார் மூன்று பேரும் சேர்ந்து நீ உயிரோடு இருந்தா சேர்ந்து வாழவிடமாட்டா என்று சொல்லி, காலால் மாறி மாறி மிதித்து செந்தில்குமார் கையில் வைத்திருந்த கட்டையால் முன்பக்க தலையில் அடித்தார் என்றும், அதை நான் நேரடியாக பார்த்தேன் என்று சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் - சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பில் Crlmp.No /2025 மனுவானது u/s 231(2)CrPC ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**